# ச்சோஸென் ஜெனெரேஷன்

# CHOSEN GENERATION

(Tamil - Monthly Magazine)

செடி : 9 மலர் : 6   Plant : 9 Flower 6   ஏப்ரல் 2024 / April 2024

ஆண்டு சந்தா ரூ.50/-   Annual Subscription Rs.50/-   தனிபிரதி விலை ரூ.5/-



**அவசர ஜெப உதவிக்கு**

ஊழியரிடம் எந்த நேரத்திலும் நேரிடையாக
தொடர்பு கொள்ள மொபைல் போன் எண்:

**94433-46119**

| | | |
|---|---|---|
| உள்ளூர் தொலைபேசி | : | 2261119 |
| வெளியூர் | : | 0416/2261119 |
| வெளிநாடு | : | 0091–416–2261119 |

# ஆசிரியர் கடிதம்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு,

உயிர்த்தெழுந்த இயேசுவின் நாமத்தின் வாழ்த்துதல் கூறி எழுதும் மடல் நலம். நலமறிய ஆவல்

வருடம் தொடங்கி 3 மாதங்கள் முடிய தேவன் உதவி பாராட்டினார். தேவனுக்கு நன்றி. ஆம். இப்பொழுதும் பிள்ளைகளின் பள்ளி படிப்பு முடிந்திருக்கும். இம்மாதத்திலிருந்து Coaching மற்றும் கல்லூரி தேடும் படலம் இருக்கும். கல்லூரி முடித்தவர்கள் வேலை தேடும் படலமும், திருமணத்திற்கு பெண் தேடும் படலமும் உண்டாயிருக்கும். அவரவர் நிலைமைக்கு ஏற்றவண்ணம் தேவைகளும் இருக்கும். இதனை மனதில் கொண்டு உங்களுக்காக ஜெபித்து வருகிறோம். நீங்களும் ஜெபயுங்கள்.

நீங்கள் எங்களோடு ஜெபத்தில் பங்கு பெறுகிறீர்களா? “One hour prayer with Pastor” ஒவ்வொரு பிரதி வாரம் செவ்வாய் கிழமையில் மாலை 7.00 மணி முதல் 8 மணி வரை பங்கு பெறுகிறீர்களா? நேரில் கூட பங்கு பெறலாம். தேவப்பாடம் பிரதி புதன்கிழமைகளில் 7.30 p.m. - 8.30 p.m. பங்கு பெறுங்கள். ஊழியத்தின் மீது வாஞ்சை உடையவர்கள், வரங்களை பெற விரும்புகிறவர்கள், அதனை பயன்படுத்த என்ன செய்ய வேண்டும் என்று அறிந்து கொள்ள இந்த வகுப்பு பிரயோஜனமாய் இருக்கும். பங்கு பெறுங்கள். உங்கள் ஜெபக்குறிப்புகளுக்காக உபவாச கூட்டங்களில் ஜெபக்குறிப்பை எழுதி வைத்து ஜெபிக்கிறோம்.

இந்த ஊழியங்களுக்காக நீங்களும் ஜெபித்துக் கொள்ளுங்கள். மேலும் வருகிற தேர்தல் நியாயப்படி நடக்கவும், சிறுபான்மை மக்களுக்கு எவ்விதமான தொல்லைகள் ஏற்படாவண்ணம் இருக்க பாரத்தோடு ஜெபிக்க முயலுங்கள். உங்கள் குடும்பங்களிலும், தொடர்ந்து தேர்தல் முடியும் வரை இடைவிடாமல் ஜெபியுங்கள். தேவன்தாமே தமது சித்தத்தை நிறைவேற்றுவாராக.

தேவன் தாமே யாவருக்கும் நற்செய்தியை தருவாராக. சமாதானததின் தேவன் தாமே உங்களை சந்திக்கும் வரை நம்மோடிருப்பாராக.

இப்படிக்கு,
கிறிஸ்துவின் பணியில் உங்களின் அன்பு சகோதரி

Sarah Vimal

(சாரா விமல்)

# மரித்தும், எழுந்தும், பிழைத்துமிருக்கிறார்

எனக்கருமையான சகோதர சகோதரிகளே! உங்களுக்கு உயிர்த்தெழுதலின் நாளில் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். உயிர்த்தெழுந்து, ஜெயித்தெழுந்த தேவன்தாமே நம்மோடு என்றென்றும் இருப்பாராக! அவரைப் பற்றியதான நற்செய்தியை நாம் காண்போமாக:

கிறிஸ்துவும் மரித்தோர்மேலும் ஜீவனுள்ளோர்மேலும் ஆண்டவராய் இருக்கும் பொருட்டு, மரித்தும் எழுந்தும் பிழைத்துமிருக்கிறார். (ரோ. 14 : 9)'

மேற்படி வசனத்தில் காணப்படுகிற இரண்டு விதமாக செயல்பாடுகளை காணமுடிகிறது. அதாவது மரித்தோருக்கும், ஜீவனுள்ளோருக்கும் ஆண்டவராய் இருக்கும் காரியம். 2வது காரியமாக மரித்தும் எழுந்தும் பிழைத்துமிருக்கிறார் என்பதைக் கவனிக்க வேண்டும் உயிர்த்தெழுதலின் நாளில் கிறிஸ்து பரமேறினார்; காட்சி அளித்தார் என்பதைவிட பிழைத்துமிருக்கிறார் என்பதுதான் மிக முக்கியமான காரியமாகும். யார் யாருக்கு தேவன் என்பதை முதலில் அறிவோமாக.

## மரித்தோர் :

நம்முடைய கர்த்தராகிய இயேசு மரித்தோருக்கும் தேவனாம். ஆம். யார் அந்த மரித்தவர்கள் என்று பார்க்கும்போது. 3 விதமான மரித்தவர்களை காணமுடிகிறது. ஜீவன் போய் அடக்கம் பண்ணப்பட்ட மரித்தவர்களுக்கு தேவனாய் இருக்கிறார். ஆம் ஒரு சில உதாரணங்கள்

"ஆபிரகாம் என் நாளைக் காண வாஞ்சையாய் இருந்தான்; கண்டு களி கூர்ந்தான்" (யோ 8:56)

"அந்த ஆவியிலே அவர் போய்க் காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார். அந்த ஆவிகள் பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம் பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது கீழ்ப்படியாமற்போனவைகள்" (1 பேதுரு 3:19,20).

மரித்துப்போன லாசருவை உயிரோடு எழுப்பின தேவன் (யோ 11:14,43) நம்முடைய இயேசு கூறும்போது. "பிரேதகுழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்" (யோ 5:28)

2வதாக ‘அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாய் இருந்த உங்களை உயிர்ப்பித்தார்.’ (எபே. 2:1). இவர்களை ஆத்துமாவில் மரித்தவர்களாக எடுத்துக்கொள்ளலாம்.

3வது சரீரம் செத்தவர்களாய் உள்ளவர்களை உயிர்ப்பித்தார். ஜீவனைத் தந்தார். இன்றுடன் 4 நாளாயிற்றே நாறுமே என்ற செத்த சரீரத்திற்கு ஜீவனைத்தந்தார். திமிர்வாதக்காரனின் செயலிழந்த உறுப்புகளை உணர்வடையச் செய்து நடக்கச் செய்தார் (லூக். 5:18-25) மேலும் சில விவரங்களை அவருடைய உயிர்தெழுதலின் வல்லமையில் உள்ளதை காண்போம்.

## ஜீவனுள்ளோர்கள் :

ஜீவனுள்ளவர்களாய் இந்நாட்களில் உள்ள யாவருக்கும் தேவனாய் உள்ளார். “என்னைத் தேடாதவர்களாலே கண்டறியப்பட்டேன்” (ரோ 10:20) ஆம் யூதர்களுக்கு மட்டுமல்ல, புறஜாதிகளிலுமிருந்து நம்மை அழைத்திருக்கிறார். அந்தப்படி : என்னால் சிநேகிக்கப்படாதவர்களைச் சிநேகிக்கப்பட்டவர்கள் என்றும் சொல்லி அழைப்பேன் (ரோ 9:24,25).

மேற்படி வசனங்களைப் பார்க்கும்போது, பாவத்தில் வாழ்ந்து வருகிறவர்களும், மனந்திருந்த முயற்சிக்கிற யாராய் இருந்தாலும் (அ) மனந்திரும்பிய மக்களானாலும், அதாவது ஜீவனை உடைய எந்த மனுஷனாயிருந்தாலும் அவர்களுக்கு கிறிஸ்து ஆண்டவராய் இருக்கிறார்.

## மரித்தார் :

அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க முன்குறிக்கப்பட்டார்.

“நாம் பெலனற்றவர்களாய் இருக்கும்போது, குறித்த காலத்தில் அக்கிரமக்காரருக்காக மரித்தார் (ரோ 5:6)

இயேசு எல்லாருக்காகவும் மரித்தார் (II கொரி 5:15) அந்த எல்லாரும் யார் என்று பார்க்கும்போது “சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும், ஜாதிகளிலுமிருந்து நம்மை தேவனுக்கென்று அவருடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு” (வெளி 5:9) இப்படி எல்லா தரப்பட்ட ஜனங்களுக்காக மரித்தார் என நிதானிக்கிறோம்.

## எழுந்தார் :

மரித்தவர் உயிர்தெழுந்தார், உயிர்த்தெழுந்த ஆண்டவர் அப்பாடா!

விட்டால் போதும் என்று கூறி பொல்லாத உலகம் எத்தனை நீங்காத அவமானம், போதுமடா என்று பரலோகம் போய் பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கப் போகவில்லை. பொதுவாக எல்லா கிறிஸ்தவர்களும் கூறுவது : உயிர்த்து ஜெயித்தெழுந்த தேவன் பரலோகத்தில் நமக்காக பரிந்து பேசுகிறார் (ரோ. 8:34) மீண்டும் வருவார் என்பதே! உண்மைதான். உயிர்த்தெழுந்த ஆண்டவர் பிழைத்தும் இருக்கிறார் என்று பவுல் அப்போஸ்தலன் கூறுகிறார்.

நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பட்டும் இருக்கிறார் (ரோ 4:25). ஆம் அதுமட்டுமல்ல நம் விசுவாசத்தை (அ) அவர்மீது கொண்டுள்ள அவர்களுடைய (நம்முடைய) விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ண (அ) பெலப்படுத்த எழுந்துமுள்ளார்.

“கிறிஸ்து எழாவிட்டால் உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்; நீங்கள் இன்னும் பாவங்களில் இருப்பீர்கள்’ (I கொரி 15:17).

‘ஜீவாதிபதியைக் கொலை செய்தீர்கள்! அவரைத் தேவன் மரித்தோரிலிருந்து எழுப்பினார். அதற்கு நாங்கள் சாட்சிகளாய் இருக்கிறோம்.

அவருடைய நாமத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே அவருடைய நாமமே நீங்கள் பார்த்து அறிந்திருக்கிற இவனைப் பெலப்படுத்தினது; அவரால் உண்டாகிய விசுவாசமே உங்கள் எல்லாருக்கும் முன்பாக இந்தச் சர்வாங்க சுகத்தை இவனுக்குக் கொடுத்தது” (அப் 3:15,16)

மேலும் “அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்” (கொலோ 1:18). ஆம் மரித்தாலும் பிழைக்கலாம் என்பதற்காக சாட்சியாக அதுவும் முதற்பேறுமானவராக எழுந்தார்.

## பிழைத்துமிருக்கிறார் :

அப்படி உயிர்த்தெழுந்த தேவன் அநேகருக்கு காட்சியளித்து ஆம் பிதாவின் வலதுபாரிசத்தில் இருந்துகொண்டு நமக்காக வேண்டுதல் செய்கிறவராய் உள்ளார் (ரோ 8:34) “அவர் நம்மை அவரோடேகூட எழுப்பி உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்” (எபே 2:7)‘. பிழைத்திருக்கிற ஆண்டவர்.

இந்த உலகத்தில் பிழைத்திருக்கிற அவருடையவர்களை தேவனிடத்தில் நெருங்க வைத்துள்ளார் என்பதை நன்றாகவே அறியலாம்.

மேலும் சாவுக்கேதுவான நம்முடைய சரீரத்தை உயிர்ப்பிப்பார் என்பது

பொதுவான கருத்து. ஆனால் உயித்தெழுதலின் இரகசியமானது: அவர்மீது கொண்டிருக்கிற விசுவாசத்தினால் சாவுக்கேதுவான, செத்துக்கொண்டிருக்கிற சரீரத்திற்கு புத்துயிர் கொடுப்பதும் தேவ இரகசியம் என்பதை நாம் அறியவேண்டும்.

மண்ணுக்கு மண்ணாக மாறும் சரீரம் கல்லறையில் வைக்கப்படுகிறது. இப்போது நாலு நாளாயிற்றே நாறுமே என்கிற லாசருவின் சரீரம் உயிருடன் எழுந்ததை (யோ 11:43)ல் காண்கிறோம். செயலிழந்து செத்துப்போன அவயவங்களாகிய கை கால்கள், மீள புத்துயிர் பெற்று எழுந்து நடந்த திமிர்வாதக்காரன், பெதஸ்தா குளத்தின் அருகே 38 வருஷமாக வியாதியின் படுக்கையில் படுத்திருந்தவனை தேவன் எழுப்பியதை மத் 9:1-9 மற்றும் யோ.5:1-9ல் வாசிக்கிறோம்.

ஆம். ஆபிரகாமுக்கு 100 வயதானபோது “தன் சரீரம் செத்துப்போனதையும், சாராளுடைய கர்ப்பம் செத்துப்போனதையும் எண்ணாதிருந்து வாக்குத்தத்தத்தின் பிள்ளையாகிய ஈசாக்கைப் பெற்றான்” (ரோ 4:19) இன்றைய தினம் உள்ள அனைத்து விசுவாசிகளுக்கும் ஆபிரகாம் விசுவாசத்தின் தகப்பனாய் மாறிப்போனான் (ரோ. 4:16) ஆம். செத்த சரீரத்தை அவயவங்களை தேவன் உயிர்ப்பிக்க வல்லவராய் உள்ளார் என்பதே பிழைத்திருக்கிற ஆண்டவரின் கிரியையாகும். இதுவே தேவ இரகசியம். அத்தோடல்லாமல், அற்பமான இந்த சரீரத்தை மகிமையான சரீரமாய் மாற்றவல்லவராய் உள்ளார் (பிலி 3:21).

எனக்கருமையான சகோதரனே! சகோதரியே! உயிர்த்தெழுந்த இந்நாளின் செய்தியில் நாம் அறிந்தது என்னவெனில், நம் தேவன் மரித்தோருக்கும் தேவனாய் உள்ளார் என்பதை அறிந்தோம்.

3 விதமான மரித்தோரை ஜீவனுள்ளவர்களாய் மாற்றவல்லவர் என்பதைக் கண்டோம். ஜீவனுள்ளோர்களாகிய மனித இனத்திற்கு தேவனாய் இருக்கிறார். அவர் மரித்தும், எழுந்தும் பிழைத்தும் இருக்கிறதற்கான இரகசியத்தைக் கண்டோம். உயிர்தெழுந்த கர்த்தரிடத்தில் நாம் அவருக்குள் பிழைத்திருக்கும்படி மன்றாட வேண்டும், காரணம் “நாம் கிறிஸ்துவுக்குள் மரித்ததுண்டானால், நமது ஜீவன் கிறிஸ்துவுக்குள் மறைந்திருக்கிறது” (கொலோ 3:3). மேலும் தினந்தோறும் நம்மை பலவிதங்களில் உயிர்ப்பிக்க ஜெபித்தல் அவசியம். நாம் வியாதிக்காக, செத்த அவயவங்களுக்காக பயப்படவே வேண்டாம். அதை உயிர்ப்பிக்க வல்லவர் நம் ஆண்டவர். அதற்கு அடிப்படையாக நமக்கு தேவையான விண்ணப்பத்தைத் தருகிறேன் வாசியுங்கள்.

“கர்த்தாவே உம்முடைய வசனத்தின்படியே என்னை உயிர்ப்பியும்” (சங் 119:107) உம்முடைய வாக்கு என்னை உயிர்ப்பித்தது (சங் 119:50) அவர் வழிகளில் உயிர்ப்பிக்கப்படுவீர்களானால், மரித்து உயிர்த்தெழுந்து பிழைத்துமிருக்கிற ஆண்டவர்தாமே, உங்களை ஜீவனுள்ளவர்களாய் மாற்றுவார். ஆமென்! அல்லேலூயா!




## ஆராதனை நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| காலை தியானம் | ஒவ்வொரு 1 ஆம் தேதி காலை 5 am - 6 am |
| பிரதி ஞாயிறு ஆராதனை | 9 am - 11.30 am |
| பிரதி செவ்வாய் | ஊழியருடன் ஒரு மணி நேர ஜெபம் 7.00 pm - 8.00 pm |
| பிரதி புதன் | வேதபாடக் கூட்டம் 7.30 pm - 8.30 pm |
| பிரதி வெள்ளி | சகோதரிகள் கூட்டம் 10.00 am - 12.00 noon |
| 2வது சனிக்கிழமை | உபவாசக் கூட்டம் 10.00 am - 2.00 pm |
| 3வது வெள்ளிக்கிழமை | முழு இரவு ஜெபம் 10.00 pm - 2.00 am |
| 4வது சனிக்கிழமை | காத்திருப்புக் கூட்டம் 7.00 pm - 8.30 pm |

## யோசித்து செயல்படுங்கள்

***நாட்டுக்கு பயன்படும் நல்லதொரு தலைவர் ஏற்பட ஜெபித்து செயல்படுங்கள் !***

***தேவசித்தம் நிறைவேற ஜெபியுங்கள் உங்கள் உரிமை ஓட்டளிப்பது.***

# கண்டவைகளும் கேட்டவைகளும்

## ஒரு மணி நேர ஜெபம்

என் பெயர் ரூத் செல்லம், திருவண்ணாமலை மாவட்டம் போளூரில் வசித்து வருகிறேன். 2008-ல் முதல் பிரசவத்தின் போது ஏற்பட்ட HB - குறைவினால் என் கால்கள் வீக்கமுடன் இருக்கும். மிகுந்த கஷ்டத்தை அனுபவித்தேன். கடந்த ஆண்டு அக்டோபர் 2023-ல் என் வீட்டிற்கு பாஸ்டரும் அம்மாவும் வந்த சந்தித்தபோது என் கஷ்டத்தை அவர்களிடம் கூறினேன். அவர்கள் ஜெபித்து விட்டு போக பிறகு தொடர்ந்து பிரதி செவ்வாய் கிழமைகளில் “One hour prayer with Pastor” நேரத்தில் ஜெபித்து வந்தார்கள். தேவனுக்கு மகிமை நான் பரிபூர்ண சுகமடைந்தேன். ஜெபித்த பாஸ்டருக்கும், அம்மாவிற்கும் நன்றி. “வல்லமை நிறைந்த 1 மணி நேரம் ஜெபம்”

- **ரூத் செல்லம்,** போளூர்

## உபவாசமும், தேவ வசனமும்

எனக்கு Lungs Problem உண்டு. அதினால் ஓயாமல் இரும்பவும், Wheezing-ம் இருந்தது. மிகவும் தலைவலி கண் உபாதையினாலும் கஷ்டப்பட்டேன். கடந்த உபவாச கூட்டத்தில் கூட்டத்தில் கலந்து கொண்டேன். கர்த்தர் சுகத்தை கொடுத்து, விடுதலையை தந்தார். தேவனுக்கே உண்டாவதாக. தேவல்லமையை பிரசிங்கித்து ஜெபித்த பாஸ்டருக்கு நன்றி.

- **சகோதரி. பாக்ய மேரி,** வேலூர்

## வார்த்தையின் வலிமை

என் பெயர் சித்ரா, என் கணவர் சேட்டு. அவருக்கு திடீரென்று வாய் மற்றும் தாடை பெலவீனமாகி ஒரு பக்கமாக திரும்பி உணர்வில்லாமல் போனது. உடனே பாஸ்டரிடம் கூறி ஜெப எண்ணெய் ஜெபித்து வாங்கி சென்றேன். 3 நாளில் சரியாகி விடும் என்றார். இருப்பினும் சித்த வைத்தியம் மேற் கொண்டேன். கர்த்தர் கூறியபடியே சுகமானார். தேவனுக்கு மகிமை. ஜெபித்த பாஸ்டருக்கு நன்றி .

-**சகோதரி. சித்ரா,** மூஞ்சூர்பட்டு.

## காக்கும் தேவன்

என் பெயர் Justine. நான் Dutyக்கு போனபோது ஒரு நாய் குறுக்கே

வந்து விழுந்தது. சமாளித்து பணிக்கு சென்று விட்டு வீடு திரும்பி கொண்டிருந்த போது திடீரென்று மாடுகள் ரோடில் பாய்ந்த படியால், தடுமாறி மோட்டார் சைக்கிளுடன் கீழே விழுந்தேன். என் பின்னால் வந்த காரின் wheels என் தோள் பட்டை மற்றும் தலையை ஒட்டி சென்றதை உணர்ந்தேன். கர்த்தர் என்னை மரண ஆபத்தில் இருந்து காத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

Bro. Justine - Vellore.

## காலைத் தியானம்

என் பெயர் சங்கீதா. நான் முதலாம் தேதி காலைத்தியானத்தில் கட்டாயம் பங்கு பெறுவது வழக்கம். இம்மாதம் என் கை வேதனையினால் கஷ்டப்பட்டேன். இன்று வேலைக்கு லீவு போட்டு விட்டு, காலைத் தியான கூட்டம் மட்டும் Attend பண்ணிவிட்டு வீடு திரும்ப யோசித்து, கூட்டத்தில் பங்கு பெற்றேன். கூட்டத்தில் பங்கு பெற்று, திருவிருந்து ஆராதனையில் பங்கு பெற்றேன். வீடு திரும்ப நினைத்த நான் வேலைக்கு போய் சாட்சி கூறினேன். இயேசுவின் சரீரமும், இரத்தமும் எப்படிப்பட்ட அற்புதத்தை செய்தது என்று எண்ணி சாட்சியை இங்கு சபையில் கூற செய்த தேவனுக்கு நன்றி .

-**சகோதரி. சங்கீதா,** வேலூர்.

## உபவாசமும், தெய்வீக சுகமும்

என் பெயர் ரமணி. என் கால் இடறலாகி, என் சுண்டு விரல் Fracture ஆகி மாவுகட்டு போட்டதால் கால்வீங்கி மிகவும் கஷ்டப்பட்டேன். உபவாச கூட்டத்தில் பங்கு பெற்று வீடு திரும்ப எழுந்தபோது என் கால்வீக்கம் மறைந்து, வலியும் நீங்கியது. ஆச்சரியம். என்னை வியக்க செய்த தேவனுக்கு மகிமை உண்டாவதாக. அதில் கூறப்பட்ட விசுவாச தேவ வார்த்தைகளின் வல்லமையைக் கண்டேன். தேவனுக்கு சாட்சியாக இதனை கூறுகிறேன்.

-**சகோதரி. ரமணி,** நெல்வாய்.

என் பெயர் சுகுணா ஆறுமுகம். என் நிலத்தில் அறுவடைக்கு காத்துக் கொண்டிருந்த நெல் பயிர் மற்றும் மல்லிகைப் பூ இருந்தது. திடீரென மழை கண்ணுக்கு எட்டிய தூரத்தில் மழை பெய்து கொண்டிருந்தது. நானோ பாஸ்டர் கூறியபடி, நிலத்தில் அறுவடை செய்து முடிக்கும் வரை மழை பெய்ய கூடாது என்று நிலத்தில் முழங்காற்படியிட்டு ஜெபித்தேன். அற்புதத்தின் தேவன், மழையை நிறுத்தினார். அறுவடையும் செய்து முடிக்க கிருபை பாராட்டினார். தேவனுக்கு மகிமை.

-**சகோதரி. சுகுணா ஆறுமுகம்,** பள்ளகொல்லை.

# தேடுங்கள் கண்டடைவீர்கள்

(அப்போஸ்தலன் நடபடிகள் 1 முதல் 14 அதிகாரம் வரையுள்ள பகுதியிலிருந்து கேள்விகள் எடுக்கப்பட்டவை.

1. எந்த ஊரில் வந்து விசுவாச கதவை திறந்ததை பற்றி கூறினார்கள் ?
2. யாருக்கு இரட்சிப்பின் வசனம் அனுப்பப்பட்டிருந்தது ?
3. எருதுகளையும், பூமாலைகளையும் கொண்டு வந்து பலியிட மனதாயிருந்தார்கள் ?
4. யாரை கர்த்தருடைய தூதன் அடித்தான் ?
5. யார்பேசும்போது கேட்டவர்கள் மீது பரிசுத்த ஆவியானவர் இறங்கினார் ?
6. யார் கைலாகு கொடுக்கிறவர்களை தேடினான் ?
7. சவுலின் பாதத்தினருகே எதை வைத்தார்கள் ?
8. யூதர்கள் யாரை கொலை செய்யும்படி ஆலோசனை பண்ணினார்கள் ?
9. ஜனங்கள் பிரமித்து எங்கே ஒடிவந்தார்கள் ?
10. யாருடைய நாட்களில் கொடிய பஞ்சம் உண்டாயிற்று ?
11. அக்கெல்தமா என்னப்பட்ட இடத்தில் என்ன சம்பவம் நடந்தது?
12. அந்த ரதத்துடனே சேர்ந்து கொள் என்று யாருக்கு ஆவியானவர் சொன்னார் ?
13. அற்புதமாய் சுகமாக்கப்பட்ட மனுஷனுக்கு என்ன வயதிருக்கும்?
14. 400 பேர் யாரை பின்பற்றினார்கள்?
15. பந்தி விசாரணை செய்ய எத்தனை பேரை தெரிந்தெடுத்தார்கள்?
16. கிறிஸ்து எழுந்திருப்பார் என்று தேவன் யாருக்கு சத்தியம் பண்ணினார்?
17. ஜீவ வார்த்தைகளை ஜனங்களுக்கு சொல்லுங்கள் என்று யார் அப்போஸ்தலருக்கு சொன்னது?
18. யாரை ஆவியானவர் கொண்டு போனார்?
19. எங்கிருந்த சபைகள் சமாதானம் பெற்று பக்தி விருத்தியடைந்தது?
20. இருதயத்திற்கு ஏற்றவனாய் யாரை தேவன் கண்டார்?

## சென்ற இதழின் கேள்விகளுக்கு சரியான விடைகள்

1. யோவான் 21 : 7
2. யோவான் 17 : 17,19
3. யோவான் 19 : 23
4. யோவான் 16 : 13
5. யோவான் 20 : 19
6. யோவான் 15 : 19
7. யோவான் 18: 19
8. யோவான் 14 : 23
9. யோவான் 13 : 27
10. யோவான் 17 : 19
11. யோவான் 13 : 11
12. யோவான் 16 : 12
13. யோவான் 14 : 9

## கடந்த மாத இதழுக்கு சரியான விடையளித்தவர்கள்

### சகோதரிகள்

1. Sis. Meera Pandian - Trichy
2. Sis. Hepziba Thomas - Chennai.
3. Sis. Maria Arputham - Trichy
4. Sis. Florence Rajamohan - Aruppukottai
5. Sis. Mercy Gopinath - Vellore
6. Sis. Annie Inbanayagam - Tuticorin
7. Sis. Sudha - Voorhees College, Vellore
8. Sis. Thilaga - Vellore
9. Sis. Nadhiya - Voorhees College, Vellore
10. Sis. J. Kavitha - Voorhees College, Vellore
11. Sis. Alice Augustin, Vellore.
12. Sis. Shekina Nallamuth - Vellore.
13. Beulah John, Vellore
14. Sis. Therasa Edwin, KGF.

### சகோதரர்கள்

1. Bro. Abraham - Vellore
2. Bro. C. Edward - Vellore
3. Bro. K. martin - Katpadi
4. Bro. Yesudoss - Vellore
5. Bro. E.B. Anand - Vellore

## ஏப்ரல் 2024 மாதத்திற்கான வாக்குத்தத்தம்

"கர்த்தர் என் பெலனும், என் கேடகமுமாயிருக்கிறார். என் இருதயம் அவரை நம்பியிருந்தது; நான் சகாயம் பெற்றேன்."

(சங் 28 : 7)

Regd.under Newspaper RNI.No. TNTAM/2015/66320 & Posting under
Regd No. VL/031/2022-2024of senior Supdt. of Post Office / VLR
No. J/RNP/Chosen Generation/Dlgs dated at Vellore - 632 001 the 20.09.2021
Posted at HPO/Vellore on 30th or 31st of every month.

# செய்தி சிதறல்

1. சக்தியை ஒழிப்பதே திமுக - காங்கிரஸ் கட்சியின் நோக்கம்.
2. பிரதமர் மோடிக்கு காங்கிரஸ் சரமாரி கேள்வி. அண்ணாமலை சுடச்சுட பதில்.
3. அஜித் பவாருக்கு கடிகார சின்னம்.
4. டெபாசிட் இழக்கவே தமிழிசை போராடனும்.
5. அரியானா அமைச்சரவை விரிவாக்கம் 8 புதிய அமைச்சர்கள் பதவியேற்பு.
6. நாடு ஒரு மாற்றத்தை விரும்புகிறார் - மல்லிகார்ஜீனா கார்கே சொல்லுகிறார்.
7. வேலூர் திமுக நிர்வாகி அலுவலகத்தில் சோதனை. பல இடங்களில் அலச வருமான வரி திட்டம்.
8. போலீஸ் கட்டுப்பாட்டில் வேலூர் மாவட்டம். 80 சிஆர்பிஎப். வீரர்கள் 28ஆம் தேதி வருகை.
9. வேட்பாளராக யாரைத்தான் அறிவிக்கப் போறாங்க, அடுத்து வரும் தகவலால் அதிமுகவினர் குழப்பம்.
10. திருச்சியில் 20ஆம் தேதி பொதுக்கூட்டம். பிரச்சாரம் தொடங்குகிறது.
11. இந்தியா தங்கபதக்கம் ஜெயிக்க மோடிதான் காரணம்.
12. பணத்திற்கு திண்டாடும் டிரம்ப்.
13. சிஏஏ விதிகளுக்கு இடைக்காலத் தடை இல்லை.

Pl. Contact : **Rev. Dr. VICTOR VIMAL / Mrs. SARAH VIMAL**
CHOSEN GENERATION ASSEMBLY
P.O. Bag No. 208, CGA Church Street, (Otteri Post Office Street)
Victor Lane, Otteri, Vellore - 632 002.Tamil Nadu, S. India.

**Owned and Published by Mrs. Sarah Vimal Published from
97, Church Street, Govindaraj Nagar, Bagayam, Vellore - 632002. Tamilnadu. South India.
Printed by Mrs. R. Shanthi, Printedat Unity Printers, Velapadi, Vellore - 632001.
Editor : Mrs. Sarah Vimal**